**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026-ம் ஆண்டு ஜீன் மாதம் 2-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.373/2022</u>**

**CNR.NO.TNTU02-012485-2022**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
திருப்பத்தூர் கிராமிய காவல் நலையம்,
திருப்பத்தூர்.
குற்ற எண்.119/2022 **......புகார்தாரர்**

//எதிரிடை//

திருப்பதி, த/பெ.ஏழுமலை **.....குற்றஞ்சாட்டப்பட்டவர்**

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.373/2022 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம், குற்ற எண். 119/2022 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) |
| 4 | குற்றம் முன்னிலைப்படுத்தப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | |
| 5 | பெயர் மற்றும் தந்தை பெயர் | திருப்பதி, த/பெ.ஏழுமலை |
| 6 | தொழில் | - |
| 7 | முகவரி | ஏழுமலையான் வட்டம், அக்ரஹாரம், நாட்றம்பள்ளி தாலூகா, திருப்பத்தூர். |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாள் | | |
| 8 | குற்ற நிகழ்வு | 29.03.2022 | | |
| 9 | புகார் | 02.04.2022 | | |
| 10 | கைது செய்யப்பட்ட நாள் | 19.04.2022 | | |
| 11 | எதிரி பிணையில் வந்த நாள் | 19.04.2022 | | |
| 12 | வழக்கு துவங்கிய நாள் | 20.02.2023 | | |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 29.05.2026 | | |
| 14 | தீர்ப்பு | 02.06.2026 | | |
| 15 | தாமதக் காரணம் | -- | | |
| | | வழக்கின் நிலை | | |
| 16 | பிணைக்காலம் | -- | | |
| 17 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 18.10.2022 | | |
| 18 | கு.ந.மு.வி.பிரிவு 240-ன் கீழ் வினவல் | 01.12.2022 | | |
| 19 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | - | | |
| 20 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா. 1 | 20.02.2023 | 20.02.2023 |
| | | அ.சா. 2 | 20.02.2023 | 20.02.2023 |
| | | அ.சா. 3 | 20.02.2023 | 20.02.2023 |
| | | அ.சா. 4 | 20.02.2023 | 20.02.2023 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா. 5 | 22.05.2023 | 22.05.2023 |
| | | அ.சா. 6 | 22.05.2023 | 22.05.2023 |
| | | அ.சா. 7 | 22.05.2023 | 22.05.2023 |
| | | அ.சா. 8 | 19.10.2023 | 19.10.2023 |
| | | அ.சா. 9 | 15.05.2026 | 15.05.2026 |
| 21 | பிரிவு 313 கு.வி.மு.ச (வினாவல்) | 21.05.2026 | | |
| 22 | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இந்த வழக்கு 31.10.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 29.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையிடுபவர் தரப்பில் உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் A.ஞானமோகன் அவர்களும் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

### (1). குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் இறந்துபோன நாகராஜ் திருப்பத்தூரில் உள்ள வேலு என்பவரின் இரும்பு கடையில் வேலை முடித்து விட்டு சைக்கிளில்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

C.K.ஆசிரமத்தில் உள்ள அவரது வீட்டிற்கு செல்ல திருப்பத்ததூர் to புதுப்பேட்டை மெயின்ரோடு மல்லிகா ஸ்ரீ ஆயில் மில் எதிரில் சென்றபோது அவருக்குப் பின்னால் திருப்பத்தூர் மார்க்மாக இருந்து வந்த எதிரி திருப்பதி TN 83 MA 2750 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splender இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நாகராஜ் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில், நாகராஜிற்கு தலையில் பின்பக்கம் மூக்கு, வலது பக்க கன்னம் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தவர் 02.04.2022–ம் தேதி 17.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.279, 304(A)–இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன், குற்றச்சாட்டு வனையப்பட்டு, எதிரியிடம் வினவியபோது எதிரி அதை மறுத்ததால், அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

(3) அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான ஆவணங்களும், வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**(4)** அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

**(5)** கடந்த 02.04.2022 அன்று காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.8 திரு.செல்வராஜ் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய பணியில் இருந்தபோது, அ.சா.1 கோபி நிலையம் ஆஜராகி கொடுத்த (அ.சா.ஆ.1) புகாரைப் பெற்று, (அ.சா.ஆ.3) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை செய்ததை, தொடர்ந்து புலன் விசாரணைக்காகப் பெற்றுக்கொண்ட அ.சா.9 காவல் ஆய்வாளர் திரு.துரைராஜ் மேற்கொண்டு புலன் விசாரணை செய்து, தனது புலன் விசாரணையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச.பிரிவு.279, 304(A)–ன் கீழ் இறுதியறிக்கையைத் தயார் செய்துள்ளார்.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

**பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் மதிப்பீடு :**

**(6)** அனைத்து சாலை விபத்துகளும் இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகள். 279 மற்றும் 304(A)–இன் கீழ் தண்டனைக்குரியது அல்ல. இரண்டு சட்டப்பிரிவுகளுக்கும் பொதுவான சாராம்சம் விபத்தானது எதிரியின்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

அதிவேகத்தாலோ அல்லது கவனமின்மையினாலோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதாகும்.

**(7) இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு.279–ன் கீழான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில்,**

*"The **essential ingredients** to constitute the offence under **Section 279 of IPC** are,*

*a) A person drives any vehicle. (any human being),*

*b) Such driving or riding is on any public way.*

*c) It is done in a manner so rash or negligent*

*d) as to endanger human life or,*

*e) as to be likely to cause hurt or injury to any other persons"*

**(8) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டான இ.த.ச.பிரிவு 304–A குறித்து பரிசீலிக்கையில்,**

*"The **essential ingredients** to constitute the offence under **Section 304(A) of IPC** are;*

*a) Death must have been caused by the accused.*

*b) Death caused by rash or negligent act.*

*c) Rash and negligent act must not amount to culpable homicide."*

மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் சாராம்சங்களை கருத்தில் கொண்டு சாட்சியங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

**மதிப்பீடு**

**(9) எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் பின்வருவனவற்றை நிரூபித்திருக்க வேண்டும் :**

i) எதிரிதான் சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய TN 83 MA 2750 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார்.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

ii) எதிரியானவர் சம்பவத்தின் போது மேற்படி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ அல்லது கவன குறைவாகவோ ஓட்டி வந்தார்.

iii) விபத்தில் இறந்த நாகராஜ் மேற்படி சாலை விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால்தான் இறந்தார்.

**(i) எதிரிதான் சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய TN 83 MA 2750 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார்**

**(10)** சம்பவத்தில் எதிரியின் ஈடுபாடு குறித்து அறிய கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.5–ன் சாட்சியம் முக்கியத்துவம் பெறுகிறது.

- **இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.5–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(11)** அ.சா.2 சாய்பல்லவி, தனது சாட்சியத்தில், இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று தெரியாது என்றும் சாலையில் கீழே விழுந்து கிடந்தவரையும் எனக்கு அடையாளம் தெரியாது என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்குப் பலனளிக்கவில்லை.

**(12)** அ.சா.5 கணேசன், தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று நாகராஜ் திருப்பத்தூர் to புதுப்பேட்டை சாலையில் அவரது சைக்கிளில் வந்துகொண்டிருந்ததாகவும், அப்போது அவருக்குப் பின்புறமாக வந்த இருசக்கர வாகனம் நாகராஜ் ஓட்டிவந்த சைக்கிளின்மீது மோதிவிட்டதாகவும், அருகிலிருந்தவர்கள் அவரை ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், ஆஜர்


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

எதிரி தான் சம்பவத்தன்று விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(13)** அ.சா.5–ன் சாட்சியத்தின் மூலம் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**(ii) எதிரிதான் சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய TN 83 MA 2750 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ, கவனக்குறைவாகவோ ஓட்டி வந்தாரா?**

**(14)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.5–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில், எதிரியானவர் மேற்படி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ அல்லது கவனக்குறைவாகவோ இயக்கியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்ககாததால் மேற்படி சாராம்சமானது இவரது சாட்சியத்தின்மூலம் அறியப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

- **இவ்வழக்கின் கேள்விப்பட்ட சாட்சிகளான அ.சா.1, 3 மற்றும் 4 ஆகியோரின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(15)** அ.சா.1, 3 மற்றும் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலிக்கும்போது, மேற்படி அனைவருமே இவ்வழக்கு குறித்து கேள்விப்பட்ட சாட்சிகளாகவே சாட்சியம் அளித்துள்ளதால், இவர்களது சாட்சியத்தின் மூலம் மேற்படி விபத்தில் எதிரியின் ஈடுபாட்டை அறியமுடியவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

◆ **<u>இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,</u>**

**(16)** அசா.6 செந்தில்குமார் மற்றும் அ.சா.7 மோகன் ஆகிய இருவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளதன் மூலம், விபத்து குறித்து போலீசார் சம்பவ இடம் சென்று விசாரணை மேற்கொண்டுள்ளதை அறியமுடிகிறது. ஆனால், இவர்களது சாட்சியமானது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் இல்லை.

◆ **<u>மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கையில்,</u>**

**(17)** இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 83 MA 2750 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் (அ.சா.ஆ.7) மோட்டார் வாகன ஆய்வறிக்கையில், *"NO DAMAGES"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**(18)** அ.சா.5–ஐ தவிர்த்து மேற்குறிப்பிட்ட அனைத்து சாட்சிகளும் தங்களது சாட்சியத்தில், விபத்து நடந்து முடிந்த பிறகு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சம்பவ இடம் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

**(19)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 கணேசன் என்பவரின் சாட்சியத்தைப் பரிசீலிக்கும்போது, அவர் தனது சாட்சியத்தில் தான் சம்பவ இடத்தில் இருந்தபோது, எதிரியானவர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்து நாகராஜ் ஓட்டி வந்த சைக்கிளின் மீது மோதியதாக கூறியுள்ளபோதிலும், சம்பவத்தின்போது எதிரி விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ, கவனக்குறைவாகவோ ஓட்டி



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

வந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரிக்கு எதிராக குறிப்பிட்டு எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை என்பதை அறியமுடிகிறது.

**(20)** மேலும், விபத்து ஏற்படுத்தியதாகக் கூறப்படும் எதிரியின் இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கையைக் கண்ணுற்றபோது, அதில் *"NO DAMAGES"* என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், விபத்தில் மேற்படி வாகனத்தின் ஈடுபாடு  சந்தேகத்திற்குரியதாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(iii) விபத்தில் இறந்த நாகராஜ் மேற்படி சாலை விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால்தான் இறந்தார்.**

**(21)** இவ்வழக்கில் இறந்து போன நாகராஜ் என்பவரின் (அ.சா.ஆ.8) பிரேத பரிசோதனை அறிக்கையில், Cranio-Cerebral Injuries sustained as a result of blunt force trauma" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து, நாகராஜ் இவ்விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால்தான் இறந்துள்ளார் என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**(22)** இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.8 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் அ.சா.1 கோபி என்பவரிடம் (அ.சா.ஆ.1) புகாரினைப் பெற்று, (அ.சா.ஆ.3) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, (அ.சா.ஆ.2) பார்வை மகஜர், (அ.சா.ஆ.4) மாதிரி வரைபடம் தயார் செய்து, இவ்வழக்கு விசாரணையில் இருந்த சமயம் நாகராஜ் சிகிச்சை பலனின்றி இறந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச.பிரிவு.279, 337-லிருந்து இ.த.ச.பிரிவு.279, 304(A)-ஆக பிரிவு மாற்றம் செய்து (அ.சா.ஆ.5) பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

தொடர்ந்து புலன் விசாரணை செய்வதற்காக இவ்வழக்குக்கோப்பை காவல் ஆய்வாளர் திரு.திருமால் என்பவரின் பார்வைக்கு வைத்தது குறித்தும்,

**(23)** அ.சா.9 காவல் ஆய்வாளர் திரு.துரைராஜ் தனது சாட்சியத்தில், மேற்படி இவ்வழக்கை புலன் விசாரணை செய்த திரு.திருமால் பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து (அ.சா.ஆ.6) பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, இவ்வழக்கில் இறந்துபோன நபருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.சதிஷ்குமார் என்பவரை விசாரித்து (அ.சா.ஆ.8) பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று, இவ்வழக்கில் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தை ஆய்விற்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.காளியப்பன் அவர்களை விசாரித்து (அ.சா.ஆ.7) மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று, சாட்சிகள் மற்றும் இவ்வழக்கில் முதற்கட்ட விசாரணை செய்த திரு.செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் தனது புலன்விசாணையை முடித்து எதிரி இ.த.ச.பிரிவு.279, 304(A)–ன்கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

**(24)** இவ்வழக்கின் சாட்சியங்களையும், ஆவணங்களையும் ஆராயும்போது, எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்பதும், இவ்விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால்தான் நாகராஜ் இறந்துள்ளார் என்பதும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளபோதிலும், விபத்தானது யாருடைய அதிவேகத்தால் அல்லது கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதை போதுமான சாட்சிகள் மூலம் அரசு தரப்பில்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

நிரூபிக்காததால், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது.

அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன் எதிரியை சென்றடைய வேண்டும் என்பதே இயற்கை நீதி தத்துவமாகும்.

**முடிவு,**

**(25)** இவ்வழக்கில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடாததால், எதிரியை மேற்படி பிரிவுகளின் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்து, பிரிவு.255(1) of Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு திருத்தங்களுக்குப் பிறகு 2026–ம் வருடம் ஜீன் மாதம் 02–ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வகை |
|---|---|---|
| **அ.சா.1** | திரு.கோபி, த/பெ.நாகராஜ் | புகார்தாரர்/கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சி |
| **அ.சா.2** | திருமதி.சாய்பல்லவி க/பெ.சுப்பிரமணி | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.3** | திரு.புஷ்பா, க/பெ.ராமு | கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சி |
| **அ.சா.4** | திரு.கிஷோர்குமார் த/பெ.கோபி | கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சி |
| **அ.சா.5** | திரு.கணேஷ் த/பெ.தேவராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.6** | திரு.செந்தில்குமார் த/பெ.கோடி | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.7** | திரு.மோகன் த/பெ.கோவிந்தன் | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.8** | திரு.செல்வராஜ் த/பெ.சின்னதாய்கவுண்டர் | இவ்வழக்கை முதற்கட்ட விசாரணை செய்த அதிகாரி |
| **அ.சா.9** | திரு.துரைராஜ் த/பெ.ஆறுமுகம் | இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்த அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | பார்வை மகஜர் | அ.சா.6 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| **அ.சா.ஆ.4** | மாதிரி வரைபடம் | அ.சா.8 |
| **அ.சா.ஆ.5** | பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.8 |
| **அ.சா.ஆ.6** | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.9 |
| **அ.சா.ஆ.7** | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.9 |
| **அ.சா.ஆ.8** | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.9 |

**அரசு தரப்பு சான்று பொருள்கள் – இல்லை**

**எதிரி  தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சான்று பொருள் – இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**பின்குறிப்பு**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணை சமயம் எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. இவ்வழக்கில் வழக்குச்சொத்துக்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**//உண்மை நகல்//**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**